**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை**

**முன்னிலை : திரு.K.அறிவொளி, M.A.,M.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை**

**Transfer Original Petition.8/2026**

(CNR No.TNSV010043012025)

----

1. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, நெற்குப்பை குரூப், ஆளுரணி குடியிருப்பில் வசிக்கும் அழகப்பன் மகன் இந்து, சுமார் 70 வயதுள்ள ரெங்கசாமி.

2. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, நெற்குப்பை குரூப், ஆளுரணி குடியிருப்பில் வசிக்கும் ரெங்கசாமி மனைவி இந்து, சுமார் 62 வயதுள்ள லெட்சுமி.

....மனுதாரர்கள்

/எதிர்/

1. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, நெற்குப்பை குரூப், ஆளுரணி குடியிருப்பில் வசிக்கும் ராமசாமி மகன் இந்து, சுமார் 80 வயதுள்ள புசலான்.

2. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, நெற்குப்பை குரூப், ஆளுரணி குடியிருப்பில் வசிக்கும் புசலான் மனைவி இந்து, சுமார் 72 வயதுள்ள பாப்பாயி.

....எதிர்மனுதாரர்கள்

.

இம்மனுவானது திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கினை சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022 வழக்குடன் ஒன்றாக ஒரே நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து விசாரண செய்யும் பொருட்டு, திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கினை சிவகங்கை, சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 24-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணச் சட்டம் ஷெட்யூல் II ஆர்ட்டிக்கிள் I-ன் படி ரூ.50/- நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டு உள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 05.12.2025, 20.01.2026

மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 21.01.2026

இம்மனு இந்நீதிமன்றத்தில் 10.03.2026 ம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வல்மீநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த நிலையில் இன்று நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவாணை

1. இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. இம்மனு திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கை, சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022 உடன் ஒருசேர விசாரித்து, ஒன்றுக்கொன்று முரண்படாமல் தீர்ப்புரை பகரப்பட ஏதுவாக சிவகங்கை, சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவாணை பிறப்பிக்கப்படுகிறது.
3. செலவு தொகை இல்லை.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ஆம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் ,டப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 00:44:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

சிவகங்கை.